REGD.No. M. 6311 ★ தனி இதழ் 1 அணு ★ இலங்கையில் 10 சதம் ★ PHONE: 55630

நம் நாடு

தி.மு.க. தின இதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ✶ The official organ of the D.P.F.

கெய்ரோவில் நில நடுக்கம்; 19 குழந்தைகள் பலி

கெய்ரோ, செப். 12—

கடந்த 30 ஆண்டுகளில் நடைபெருத ஒன்ருக, கெய்ரோ நகரில் நில நடுக்கம் ஏற்பட்டிருக்கிறது. இந்தப் பயங்கரமான நில நடுக்கத்தின் விளைவாக, ஏராளமான பொருட் சேதம் ஏற்பட்டதுடன், 19 பள்ளிக் குழந்தைகள் கொல்லப்பட்டிருக்கின்றனர்; 68 பேர் படுகாயமுற்றிருக்கின்றனர். அலெக்சாண்டிரியா, ஜெருசலம், சைப்ரஸ் இங்கெல்லாம் நிலநடுக்கம் ஏற்பட்டதாகச் செய்திகள் கிடைத்திருக்கின்றன; பல கட்டிடங்களுக்குச் சேதம் ஏற்பட்டதாம். இந்த நில நடுக்கம் ஒரு நிமிட நேரம் நீடித்ததாகக் கூறப்படுகிறது.

மலர் 3] சென்னை: ஆவணி 28உ செவ்வாய் (13—9—55) ★ ★ வெளியூர்: ஆவணி 29உ புதன் (14—9—55) [இதழ் 78

'தென்னிந்தியர்கள் வட இந்தியாவில் வேலை தேட முடியாது'

'மூலப் பொருட்களில்லை என்ற வாதம் செல்லாது'

'ஜப்பான் அனுபவம் அதைப் பொய்யாக்கிவிட்டது'

அனந்தராமகிருஷ்ணனின் ஆணித்தரமான பேச்சு

கோழிக்கோடு, செப். 12—

" நாடு விடுதலை பெற்ற பின்னரும்கூட கனரகத் தொழில்கள் கல்கத்தாவிலும், பம்பாயிலும் துவங்கப்படுகின்றன.

" தென்னிந்தியாவில் கனரகத் தொழில்களுக்குத் தேவைப்படும் மூலப் பொருட்கள் இல்லை எனக் கூறப்படுகிறது; ஜப்பானுடைய அனுபவத்திற்கு முன்பு அந்த வாதம் தலை காட்டாது."

—இவ்வாறு, மலபார் வியாபார சங்கத்தின் 26-வது ஆண்டு விழாவில் பேசிய தொழிலதிபர் அனந்தராம கிருஷ்ணன் குறிப்பிட்டுள்ளார் அவர் மேலும் கூறியதாவது :—

" வட இந்தியாவில் தொழில் தேடி அலைவது தென்னிந்திய மக்களால் இயலாது.

" இந்தியப் பேரரசுடன் சென்னை அரசாங்கம் தீவிரமாகப் போராடி, குறிப்பிட்ட கனரகத் தொழில்களையும், நடுத்தரத் தொழில்களையும் துவங்குவதற்காகத் தேவைப்படும் விசேடத் தொகையைப் பெற்ருலல்லாது, தென்னிந்தியாவில் உள்ள வேலையில்லாத் திண்டாட்டத்திற்குப் பரிகாரம் தேட முடியாது."

ஆந்திரத்திற்கு ரூ. 125,10,00,000

அதிகாரபூர்வமான தகவலாம்

கர்நூல், செப். 12—

இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் ஆந்திர மாநிலத்திற்கு 125 கோடி 10 இலட்சம் ரூபாயை திட்டக் குழு ஒதுக்கியுள்ளதாக அதிகாரபூர்வமாகத் தகவல் கிடைத்துள்ளதாம்.

5,0000 மக்கள் ஆர்ப்பாட்டம்

லூதியானு, செப். 11—

மகா பஞ்சாப் தலைவர் கால சரண் சர்மாவைக் கைது செய்ததை ஆட்சேபித்தும், நேற்றிரவு நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் போலீசார் தடியடிப் பிரயோகம் செய்தது பற்றி விசாரணை நடத்த வேண்டுமெனக் கோரியும் 50,000 மக்கள் லூதியானு வீதிகள் வழியே ஊர்வலமாகச் சென்றனர்.

வாரிசு வரி மூலம் 1954—55-ம் ஆண்டில் மொத்தம் ரூ. 35,14,000 வசூலிக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது; நடப்பு நிதி ஆண்டில் 1,823 'வழக்கு'களைப் பைசல் செய்ய வேண்டியிருந்ததாம்.

'மக்கள் கவிஞர்' எவர்?

'ஏன் பாரதி விழாவில் கலந்துகொள்கிறேம்?'

சென்னை பாரதி விழாவில் அண்ணு விளக்கம்

" பாரதி விழாவில் நான் கலந்துகொள்வது இது முதல் முறையல்ல; நான் பாரதி விழாவில் கலந்துகொள்வது சிலருக்கு ஆச்சரியமாயும், சிலருக்கு அச்சமாயும், மற்றும் சிலருக்கு அருவருப்பாயும் இருக்கக்கூடும்;

" பாரதி விழாவில் 'மக்கள் கவிஞன்' என்ற தலைப்பில் பாரதியைப் பற்றிப் பேசுவது கேட்டு, சிலர், 'இவரா பாரதியைப் பற்றிப் பேசினர்?' என்று ஆச்சரியப்படுவர்; 'இவர் ஏன் பாரதியைப் பற்றிப் பேச வேண்டும்?' என்று சிலர் அச்சப்படுவர். 'பாரதி விழாவில் அண்ணாதுரை ஏன்?'— என்று மற்றும் சிலர் அருவருப்படையக்கூடும்;

" பாரதியாரைப் பாராட்ட, ஒரு சிலர், தங்களுக்கு மட்டுமே உரிமை இருப்பதாக எண்ணிக் கிடக்கின்றனர்; நான் பாரதியாரைப் பற்றிப் பேசுவதற்கு, அவர்களைப் போல உரிமை பெற்றிருப்பதாகவே கருதுகிறேன்;

" பாரதியோ, அல்லது, வேறெந்தக் கவிஞரோ, அவர் கவிஞர் என்ருல்—மக்களின் கவிஞர் என்ருல், அவரைப் பாராட்டுவதுதான்—எல்லோரும் பாராட்டுவதுதான் தமிழர் பண்பாடாயிருக்க முடியும்;

" மாளிகை ஒன்றிருக்கிறது; அந்த மாளிகையை, அதனுடைய சொந்தக்காரர் மட்டுமே பாராட்டலாம் என்று கூற முடியுமா?

" மாளிகையைப் பலர், தங்கள் தங்கள் கண்களுக்குத் தெரிகிறபடி பார்க்கக்கூடும்;

"அம்மாளிகையை, கட்டிடக் கலைஞன் ஒருவன் பார்த்தால், அதன் கவர்ச்சியையும், வசீகரத்தையும் கண்டு அவன் பரவசமடைவான்; கட்டிடத் தொழிலாளி அதைக் கண்டால், 'இவ்வளவு பிரம்மாண்ட'மான மாளிகையை எழுப்ப தொழிலாளர்கள் என்ன பாடுபட்டனரோ? எத்தனை தொழிலாளர்கள் வயிற்றிலடித்தனரோ! எத்தனை பேருக்கு அரைகுறைக் கூலி தந்து அடித்து விரட்டினரோ,' என்று அவன் எண்ணக்கூடும்; ஒரு புகைப்படக் கலைஞர் கண்டால், 'மாளிகையை எந்தக் கோணத்திலிருந்து படம் பிடித்தால் அழகாயிருக்கும்' என்று அவர் எண்ணுவர்; ஓவியக் கலைஞர் ஒருவர் அம்மாளிகையைக் கண்டால், 'அதனை என்ன வண்ண ஓவியமாக்கலாம்' என்று சிந்திப்பார்; போலீஸ்காரர் அந்த மாளிகையைக் கண்டால், 'மாளிகைக்கு நுழைவு வாயில்கள் எத்தனை? எங்கு பாதுகாப்பு குறைவாயிருக்கிறது?' என்று எண்ணுவர்; திருடன் ஒருவன் அம்மாளிகையைக் கண்டால், 'மாளிகையின் எந்த ஜன்னல் ஓட்டையாயிருக்கிறது?' என்று சுற்றுமுற்றும் பார்ப்பான்;

" இப்படிப் பலரும், மாளிகையை தங்கள் தங்கள் நோக்குடன் கண்ணுறுவர்; மாளிகையைக் கட்டக் கூடியவர்கள் தான், அல்லது மாளிகைக்கு உரியவர்தான் மாளிகையைக் காண வேண்டுமென்பதல்ல; மாளிகையைப் பார்ப்பவர்கள், தங்கள் தங்கள் மனப்போக்கின்படி மாளிகையைப் பார்ப்பதைப்போலத்தான், பாரதியையும், தங்கள் தங்கள் நோக்குடன் பலரும் காணுகின்றனர்;

" 'பாரதி தேசியக் கவி; எனவே, நாங்கள்தான் பாராட்டுவோம்; நாங்கள்தான் அதற்கு உரிமை பெற்றவர்கள்'— என்பது, மாளிகையை அதன் சொந்தக்காரர் தவிர, பிறர் எவருமே பார்க்கக் கூடாது என்பதற்கு ஒப்பாகும்;

" மேலும், மாளிகையின் சொந்தக்காரர்களே மாளிகையின் அருமையையும், அழகையும் பாராட்டிக்கொள்வதினும், வெளியிலிருந்து பார்ப்பவர்கள் பாராட்டுவதுதான் சாலச் சிறந்த ஒன்ருகும்;

" மரத்தில் உள்ள பழத்தின் அருமை மரத்திற்குத் தெரிவதைக் காட்டிலும், அந்தப் பழத்தை உண்பவனுக்குத்தானே தெரியும்?

" மாளிகையின் சொந்தக்காரர்களுக்குக் கவலை எல்லாம், கட்டிடம் கலையாமல் பார்த்துக்கொள்ள வேண்டுமென்பது தான்; ஆனல், பிறருக்கோ, அந்த மாளிகையின் சிறப்பும், பயனும் பற்றித்தான் கவலை;

" அதுபோல, பாரதி ஒரு எழிலோவியன்—இன்பக் கவிஞன்—உள்ளத்திற்கு உரமும், உற்சாகமும் ஊட்டுகிற

(தொடர்ச்சி 4-ம் பக்கம் பார்க்க.)

மாநிலங்களுக்கு டில்லி கோரிக்கை

'தடை'களைத் தளர்த்த வேண்டுமாம்!

புதுடில்லி, செப். 12—

" தனிப்பட்டவர்கள் வீடுகள் கட்டுவதற்கு ஊக்கமளிப்பதற்காக இப்போதுள்ள வாடகைக் கட்டுப்பாடு சட்டங்களிலுள்ள சில தடைகளைத் தளர்த்துமாறு, எல்லா மாநிலங்களையும் மத்திய சர்க்கார் கேட்டுக் கொண்டுள்ளனர்," என்று மக்கள் சபையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கட்டாய இந்தியை திரும்பப் பெறுக!

வடஆற்காடு மாவட்ட ஆட்சி மன்றத் தீர்மானம்

" தமிழையே தாய் மொழியாகக் கொண்டு—உயிராகக் கொண்டு பெரும்பாலான தமிழர்கள் வாழும் சென்னை மாநிலத்தில், தமிழ் மொழியையே சரிவரத் தெரிந்துகொள்ளாத மக்கள் நிறைந்திருக்கும்போது, தமிழ் நாட்டில் கட்டாய இந்தியைப் புகுத்த வேண்டும் என்ற திட்டத்தை சென்னை சர்க்காரும், மத்திய சர்க்காரும் உடனடியாகத் திரும்பிப் பெற்றுக் கொள்ள வேண்டும்."

என்ற தீர்மானத்தை 1—9—55ல் நடைபெற்ற வடஆற்காடு மாவட்ட ஆட்சி மன்றத்தின் சாதாரணக் கூட்டத்தின்போது, ஆட்சி மன்ற உறுப்பினரும், தி. மு. கழகத் தோழருமான ஏ. எல். சி. கிருட்டிணசாமி பிரரேபித்தார்.

ஆட்சி மன்றக் கூட்டம், மன்றத் தலைவர் டி. பி. கேசவன் அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

தோழர் ஏ. எல். சி. கிருட்டிணசாமி பிரரேபித்த மேற்கண்ட தீர்மானத்தைக் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த மன்ற உறுப்பினர் தோழர் வி. எம். வீரராகவன் அவர்கள் ஆதரித்திருக்கிருர்.

இறுதியில் இந்தியைக் கட்டாயமாகப் புகுத்தக் கூடாதென்ற தீர்மானம் ஆட்சி மன்றத்தாரால் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது. (ந. நி.)

படிக்கட்டு சரிந்து 13 பேர் பலி; 100 பேர்களுக்குக் காயம்

ஹிராகுட் அணைப் பகுதியில் சம்பவம்

சம்பல்பூர், செப் 12—

ஹிராகுட் அணைக்கட்டுப் பிரதேசத்தில் சுமார் 70 அடி உயரமுள்ள படிக்கட்டு ஒன்று வீழ்ந்ததினுல் 7 பெண்கள் உட்பட 12 தொழிலாளர்கள், ஒரு மேற்பார்வையாளர் ஆகிய 13 பேர்கள் கொல்லப்பட்டிருக்கின்றனர் என்று தெரிகிறது.

சுமார் 100 பேருக்கு மேல் விபத்தினுல்காயமடைந்தனர்; இவர்களில் 81 பேர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பெற்றிருக்கின்றனர்.

இறந்துபட்டவர்களின் நெருங்கிய உறவினருக்கு ரூ. 200 நஷ்டஈடு தரப்பட்டிருக்கிறது; அவர்களது நஷ்டஈட்டுக் கோரிக்கை இறுதியாக முடிவாகிறதற்கு இடையில், இந்த நஷ்டஈடு தரப்பட்டிருக்கிறது என்று அதிகாரிகள் அறிவித்திருக்கின்றனர்.

மாண்டிபெல்லோ தீவில் அணு ஆயுத சோதனை?

அடுத்த ஏப்ரல் மாதத்தில், ஆஸ்திரேலியாவை அடுத்துள்ள மாண்டிபெல்லோ தீவில், மூன்ருவது தடவையாகப் பிரிட்டன், அணு ஆயுதப் பரிசோதனை நடத்தும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

வினேபா பற்றி சினிமா

அஜ்மீர், செப். 12—

ஆசாரியா வினேபா பாவேயின் வேலைத் திட்டங்கள் பற்றி இந்திய சர்க்கார் சினிமா இலாகா ஒரு படம் தயாரித்து வருவதாகத் தெரியவருகிறது.

இந்தத் தகவலை, டாக்டர் கேஸ்கர், கூட்டமொன்றில் தெரிவித்திருக்கிருர்.

நம் நாடு

தி.மு.க.தின இதழ் ஆசிரியர் இரா.நெடுஞ்செழியன்

சென்னை 13—9—'55 செவ்வாய்

புயலுக்குப் பின்...!

இன்றைக்குச் சுமார் நாற்பத்திமூன்று ஆண்டுகளுக்கு முன் உருவான சுதந்திரக் கோரிக்கை, வட ஆப்பிரிக்காவில் பிரெஞ்சுக் காலனியாயிருக்கும் மொராக்கோவில் கடந்த இரு கிழமைகளுக்கு முன் புயலுருக்கொண்டு ஆயிரத்திற்கும் மேற்பட்ட உயிர்கள் மொராக்கோவின் விடுதலைக் கோரிக்கைக்குக் காணிக்கையாக்கப்பட்டிருக்கின்றன.

மூன்று நாட்கள் மொராக்கோ நகரங்களில், பீரங்கி வெடிச் சத்தம்—இராணுவ நடமாட்டம் எழுப்பிய பேரிரைச்சல்—வீழ்ந்துபட்டோரின் ஓலம்—தெருவெல்லாம் பிணக்காடு, இரத்த வெள்ளம்—இத்தனையும், இன்னும் பல கோர நிகழ்ச்சிகளும் நடைபெற்றன. அத்தனையும் எதற்காக? 'மொராக்கோ, மொராக்கோ மக்களால் ஆளப்பட வேண்டும்' என்ற விடுதலைக் கோரிக்கைக்காக—'பிரெஞ்சு ஏகாதிபத்தியத்தின் பிடியினின்றும் அகல வேண்டும்' என்ற சுதந்திர இலட்சியத்திற்காக.

இரு கிழமைகளுக்குமுன் மொராக்கோவில் வீசிய புயல், பிரெஞ்சு ஏகாதிபத்தியவாதிகளுக்கு மொராக்கோ மக்களால் தரப்பட்டிருக்கிற இறுதி எச்சரிக்கை என்று நாம் அப்போதே எழுதியிருக்கிறோம்.

புயல் இப்போது ஓய்ந்திருக்கிறது; ஓரளவுதான் — அதுவும் நிரந்தரமாக அல்ல; தற்காலிகமானது என்றுதான் கூற வேண்டியிருக்கிறது, புயலுக்குப்பின் நிகழ்ந்துள்ள சம்பவங்கள்.

'மொராக்கோ மக்களுக்கு, பிரெஞ்சு ஏகாதிபத்தியவாதிகள் உணவும், உடையும், இருப்பிடமும் போதுமான அளவு தந்திருக்கின்றனர்; சாலைகள் அமைத்துத் தந்திருக்கின்றனர்; சோலைகள், உண்டாக்கியிருக்கின்றனர்; தங்களின் ஆதிபத்தியத்திற்கு எதிராக, சுதந்திரக் குரல் எழுப்புவோரைச் சுட்டு வீழ்த்தும்போது, தாங்கள் பெறப்போகிற சுதந்திரத்திற்கு விலையாக—விலையில்லாத உயிரைத் தந்தவர்கள் போக, கைகளையும், கால்களையும், கண்களையும் காணிக்கையாகத் தருகிறவர்களின் புண்ணுக்கு மருந்து தடவ மருத்துவ மனைகளையும் அமைத்துத் தந்திருக்கிறார்கள்; இத்தனைக்கும் மேலாக, பிரான்சு நாட்டு புரட்சிக்கு வித்திட்ட வால்டையரின் சுதந்திர முழக்கமிடும் இலக்கியங்களையும் தந்திருக்கின்றனர்—படித்துப் பயன் பெறுவதற்காக! ஆனால், மொராக்கோ மக்கள் கோரும் அரசியல் சுதந்திரத்தை மட்டும் அவர்களுக்குத் தர மறுக்கிறார்கள்—பிரெஞ்சுக்காரர்கள்!

இரு வாரங்களுக்குமுன்னர் வீசிய புயல் விளைவித்த கோரம், பிரெஞ்சு ஏகாதிபத்தியவாதிகளுக்கு, 'இனியும், நாம் அவர்களை அடக்கி ஆள முடியாது; அவர்களுக்கு சுதந்திரம் வழங்கிவிட வேண்டியதுதான்' என்ற எண்ணத்தை ஊட்டத் தவறிவிடுமானால், எதிர்காலம் பயங்கரமானதாயிருக்கக்கூடும்!

மொராக்கோவில் பிரெஞ்சு நிர்வாக அதிகாரியாயிருந்த கிராண்ட்வால், பிரெஞ்சு தேசியவாதிகள் மட்டுமின்றி, தீவிர தேசீயவாதிகளில் ஒருபகுதியினர்கூட ஏற்றுக்கொள்ளத்தக்க வகையில்—மொராக்கோ தேசியவாதிகளின் பிரதிநிதிகள் பிரெஞ்சு சர்க்காரின் பிரதிநிதிகளைச் சந்தித்துப் பேசுவதற்கான ஏற்பாடுகளைச் செய்திருந்தார்; பேச்சுவார்த்தைகளும் நடைபெற்றுக் கொண்டு வந்தன.

பென் அராபா என்ற தங்களின் 'கைப்பாவை'தான் சுல்தானாக இருக்க வேண்டும்—பதவியிலிருந்து விலக்கி நாடு கடத்தப்பட்ட பென் யூசுப் திரும்பவும் சுல்தானாக்கப்பட முடியாது—என்ற பாரிஸ் ஆட்சியாளர்களின் விட்டுக்கொடுக்கும் மனப்போக்கில்லாமையின் விளைவாக ஏற்கனவே உருவாகிய புயலின் 'தரம்' அதிகமாயிற்று; புயலுக்குப் பிறகும் பாரிஸ்காரர்களின் ஆணவப் போக்கு, மொராக்கோவிலிருந்த நிர்வாக அதிகாரியை பதவியினின்றும் விலகிக் கொள்ளுமாறு நிர்ப்பந்தித்திருக்கிறது.

'பிரச்சினையை ஐ. நா. சபையில் விவாதிக்க வேண்டும்' என்று, ஆசிய-ஆப்பிரிக்க நாடுகளைச் சேர்ந்த பிரதிநிதிகள் முயற்சித்து, அதற்கான நடவடிக்கைகளையும் மேற்கொண்டிருக்கின்றனர். மொராக்கோ மக்களுக்கு நியாயமாக வழங்கப்பட வேண்டிய விடுதலையை வழங்காததின் விளைவுதான் இரு வாரங்களுக்கு முன் வீசிய கடும்புயலாகுமென ஐ. நா. பாதுகாப்புக் குழுவில் அறிக்கை ஒன்று தரப்படவிருக்கிறது.

தனது நிர்வாக அதிகாரி, 'பதவியை விட்டு விலகிக்கொள்கிறேன்' என்று அறிவித்த பின்பும்கூட, நிலைகளின் நெருக்கடியை பிரெஞ்சு ஏகாதிபத்தியவாதிகள் புரிந்துகொள்ளாமல், அவரது விலகல் கடிதத்தை ஏற்றுக்கொண்டு, மொராக்கோ சுதந்திரக் கோரிக்கையை அலட்சியம் செய்வதுபோல நடந்துகொள்வது, பெரும் ஆபத்திற்கு அடிகோலுவதாகும்.

டுனீசியாவிலும்கூட எத்தனையோ முயற்சித்தும், அங்கு தங்களின் ஆதிபத்தியம் நிலைநாட்டப்பட முடியவில்லை; இந்தோ-சீனாவும், அப்படியே; புதுச்சேரியிலும் அதேபோல — என்பன போன்ற நிலைகளை எண்ணி, இன்னும் காலந்தாழ்த்தாது, மொராக்கோவிற்கு உரிமை வழங்குவதுதான் விவேகமான செயலாயிருக்க முடியும்—பிரெஞ்சுக்காரர்களைப் பொறுத்தவரையில்!

இல்லாவிட்டால், புயலுக்குப்பின் அமைதி நிலவும் என்பதற்கு மாறாக, புயல் கோர உருக்கொள்ளும் என்பதை நாம் சொல்லித்தான் பிறர் தெரிந்துகொள்ள வேண்டுமென்பதில்லை.

ஏற்கனவே எழுதப்பட்டுள்ள விடுதலை வரலாறு இதைத் தெளிவாகக் கூறிக் கொண்டிருக்கிறது. பொறுத்திருந்துபார்க்கலாம்—பிரெஞ்சு ஏகாதிபத்தியவாதிகள் புயலுக்குப்பின் என்ன செய்கின்றனர் என்று!

பி. சி. ஜி. ஊசியின் விளைவுகள்

பரிசீலனை செய்ய ஒவ்வொரு மாநிலத்திலும் குழு நியமனம்?

'ஒவ்வொரு மாநிலத்திலும் பி. சி. ஜி. ஊசியினால் ஏற்படும் விளைவுகளைப் பரிசீலனை செய்ய பிரபல மருத்துவர்கள் கொண்ட குழுவை ஏற்படுத்த வேண்டும்,' என்ற யோசனையை, இந்திய சர்க்கார் சுகாதார மந்திரி இலாகா தெரிவித்துள்ளது.

சென்னையிலிருந்து கிடைத்த சில 'விளைவு'கள் குறித்து பரிசீலனை செய்யப்பட்டுவிட்டது.

பி. சி ஜி. ஊசியின் தகுதியைப் பற்றியோ, தகுதியின்மையைப் பற்றியோ இந்தக் குழு எவ்வித அபிப்பிராயமும் வெளியிடும்படி கேட்கப்படமாட்டாதாம்.

★

ஆச்சாரியாருக்கு எதிராக மற்றொரு 'தாக்குதல்'

புதுடில்லி, செப். 12—

"பரவலாக ஊசி போட்டால்தான் க்ஷயரோகம் தொத்துவதைத் தடுக்க முடியும் என்று கண்டுபிடிக்கப்பட்ட பின்னரே பள்ளிக் குழந்தைகளெல்லோருக்கும், பி. சி. ஜி ஊசி போடுவதென முடிவு செய்யப்பட்டது," என்று இந்திய சுகாதார சர்வீசுகள் டைரெக்டர்-ஜெனரல் லெப்டினென்ட்-கர்னல் சி. கே. லட்சுமணன் கூறியுள்ளார்.

"நம் நாட்டில் க்ஷயரோகத்தால் ஏற்படும் மரணத்தையும், இவ் வியாதியால் ஏற்படும் இதரக் கொடுமைகளையும் பி. சி. ஜி மருந்தைக்கொண்டு குறிப்பிட்ட காலத்துக்குள் சரிபாதியாகவோ, அல்லது, ஐந்தில் ஒரு பங்காகவோ குறைத்துவிடலாம்," என்றும் அவர் குறிப்பிட்டார்.

பத்ராவதி இரும்பு, எஃகு தொழிற்சாலை

பரவலாக்குவதற்குத் திட்டம்

பெங்களூர், செப். 11—

பத்ராவதி இரும்பு, எஃகுத் தொழிற்சாலையைப் பரவலாக்குவதற்கு ரூ 3 கோடி இந்திய சர்க்கார் அனுமதித்திருக்கிறதாம்.

இந்தப் பரவலாக்கும் திட்டத்தை நிறைவேற்றுவதற்கு உத்தேசமாக ரூ. 15 கோடி முதல் ரூ 17 கோடி வரை மதிப்புப் போடப்பட்டதென்றும், இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் இது சேர்க்கப்படாவிட்டாலும், திட்ட காலத்தில் இது எடுத்துக் கொள்ளப்படுமென்றும் மைசூர் உள்நாட்டு மந்திரி கூறியுள்ளார்.

அலுவல் உள்ளதாம்—ஆட்கள் இல்லையாம்!

தொழிலாளர்களைக் காட்டிலும் பிரிட்டனில் வேலைகள் அதிகமாக இருக்கிறதாம்!

ஐந்து இலட்சம் வேலைகள் 'காலி' உள்ளதென்று தொழில் இலாகா அறிவித்துள்ளதாம்!

சேலம்—திருச்சிக்கிடையே இரயில் மார்க்கம்

இராசிபுரம்—நாமக்கல் வழியாக சேலம்—திருச்சி இடையே இரயில் மார்க்கம் அமைக்கும் திட்டம் இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் சேர்க்கப்பட்டிருப்பதாக சென்னை கவர்னர், இராசிபுரம் நகரசபை வரவேற்பிற்கு பதிலளிக்கையில் தெரிவித்துள்ளார்.

தனிப்பட்ட நிறுவனங்களில் காலியாகும் வேலை இடங்கள்

'சர்க்கார் மூலமே நிரப்பப்பட வேண்டும்'

இந்திய சர்க்கார் சட்டம் இயற்றும்

திருச்சி, செப். 9—

தனிப்பட்டவர் நிறுவனங்கள், அலுவலகங்கள் ஆகியவைகளில் காலி விழக்கூடிய வேலை இடங்கள் பற்றிய விவரங்களைச் சர்க்காருக்கும், வட்டார வேலை தேடித்தரும் நிறுவனங்களுக்கும் அந்தத் தனிப்பட்டவர் நிறுவன நிர்வாகிகள் அறிவிக்க வேண்டும்—என்று கோரும் சட்டம் ஒன்றை மத்திய சர்க்கார் நிறைவேற்றும் என்று தெரிகிறது.

மேலும், அந்த நிறுவனங்கள், கால் ஆண்டுக்கு ஒருமுறை காலியான வேலை இடங்கள்—எத்தனை வேலைகள் காலியாயிருக்கின்றன—எத்தனை பேர் வேலையிலிருந்து நீக்கப்பட்டனர்—எத்தனை பேர் சர்க்கார் வேலை தேடித்தரும் நிறுவனத்தின்மூலம் வேலைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டனர்—என்ற விவரங்களையும் சர்க்காருக்குத் தெரிவிக்குமாறு கோரப்படுவர் என்றும் தெரிய வருகிறது.

பம்பாய் பால் பண்ணை நிர்வாகம்

சர்க்கார் சார்பில் நிதி மந்திரி வருத்தம் தெரிவித்தார்

புனா, செப். 9—

ஆரே பால் பண்ணையில் மேற்கொள்ளப்பட்ட சில வேலைகளுக்கு அந்தப் பண்ணை நிர்வாகி, முன் கூட்டியே நிர்வாகத் தலைமை அனுமதி பெறாது விடுத்தது குறித்து பம்பாய் சட்டசபையில் நிதி மந்திரி டாக்டர் ஜீவராஜ் மேத்தா சர்க்கார் சார்பில் வருத்தம் தெரிவித்திருக்கிறார்.

1951-52ம் ஆண்டுக்கான கணக்குத் தணிக்கை அறிக்கைமீது நடைபெற்ற விவாதத்தின்போது, சுமார் ரூ. 2 கோடி பெறுமான அளவு வேலைகள் முன் அனுமதியின்றி பண்ணையில் மேற்கொள்ளப்பட்டதாக அவர் தெரிவித்திருக்கிறார்.

ஒரிசா வெள்ளத்திற்கு காரணம் என்ன?

"சென்ற ஆண்டில், பிக்னியில் நீர்வளிக் குண்டு வெடிக்கப்பட்ட பின்னர் எழுந்த கதிரியக்க சாம்பல் கல்கத்தா வரையில் காற்றில் பறந்து வந்து வீடுகளின் மீதெல்லாம் விழுந்தது" என்று பேராசிரியர் சத்யன் போஸ் கூறியுள்ளார்.

கல்கத்தாவில் 'சமாதானத்திற்கு அணுசக்தி' கண்காட்சியை அவர் ஆரம்பித்து வைத்துப் பேசுகையில், சமீபத்தில் ஏற்பட்ட கால நிலை மாறுதல், ஒரிசா வெள்ளம் போன்றவை யாவும், நீர்வளிக் குண்டு வெடிக்கப்பட்டதின்விளைவுகள்தானா என்பதை யூகிக்கவேண்டிய பிரச்சினை என்றும், ஆனால் அப்பொழுது படிந்த கதிரியக்கச் சாம்பலின் விளைவுகளை நிபுணர்கள் இன்னமும் ஆராய்ந்து வருகின்றனர் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

கலவரங்களின் விளைவு

உள்நாட்டு அமைச்சர் விலகுகிறார்

இஸ்தான்புல், செப். 11—

துருக்கி உள்நாட்டு மந்திரி ஸ்ரீ. நாமிக் கெடிக் ராஜினாமா செய்துவிட்டாரென்று உத்தியோக பூர்வமாக அறிவிக்கப்படுகிறது. சமீபத்தில் துருக்கிய நகரங்களில் கிரேக்கரை எதிர்த்து நடந்த கலவரங்களை அடுத்து இராஜினாமா செய்தார்.

சிறிய பத்திரிகைகளுக்குக் காகிதங்கள்

இந்திய சர்க்கார் முடிவு

6 மாதங்களுக்கு 5 டன்கள் அல்லது அதற்குக் குறைவாகப் பத்திரிகைக் காகிதம் தேவையுள்ள சிறிய பத்திரிகைகள், குறைந்த அளவு 5 டன்கள் வரை இறக்குமதி செய்வதற்கான 'லைசென்சு' வழங்க இந்திய சர்க்கார் முடிவு செய்திருப்பதாகத் தெரிகிறது.

'பொம்மை' சுல்தான் நீக்கப்படுவார்?

மொராக்கோ 'விடுதலை'க் கிளர்ச்சி எதிரொலி?

மொராக்கோ தேசிய வாதிகளும், பிரெஞ்சு சர்க்காரும் தயாரித்த அரசியல் சமரசத் திட்டத்தை நாடு கடத்தப்பட்டுள்ள மொராக்கோ முன்னாள் சுல்தான் பென்-யூசுப் அங்கீகரித்துவிட்டாராம்.

பிரெஞ்சு சர்க்காரால் நியமிக்கப்பட்டுள்ள இப்போதைய 'பொம்மை சுல்தான்' பென் அராபாவை நீக்கிவிட்டு, ஒரு 'ரீஜன்சி கவுன்சிலை' அமைப்பது, மடகாஸ்கருக்கு நாடு கடத்தப்பட்டுள்ள முன்னாள் சுல்தானை பாரிசில் வசிக்க அனுமதிப்பது ஆகியவை இத்திட்டத்தின் முக்கியப் பிரிவுகளாம்.

இந்தியாவில் எஃகு உற்பத்தி விஸ்தரிப்பு

இந்தியாவில் உள்ள எஃகு உற்பத்திச்சாலைகளின் அங்கீகரிக்கப்பட்ட பரவலான திட்டங்கள் பூர்த்தியாகி, சர்க்காருக்குச் சொந்தமான புதிய எஃகு உற்பத்திசாலைகளும் நிர்மாணிக்கப்பட்ட பிறகு, இந்தியாவில் இரும்பு-எஃகு வருட உற்பத்தி பின்வரும் அளவுகளில் இருக்குமென்று எதிர்பார்க்கப்படுகிறது:—

	டன் கணக்கில்
டாட்டா அயர்ன் அண்ட் ஸ்டீல் கம்பெனி லிமிடெட்	15,00,000
இண்டியன் அயர்ன் அண்ட் ஸ்டீல் கம்பெனி லிமிடெட்	8,00,000
மைசூர் இரும்பு-எஃகுத் தொழிற்சாலை	1,00,000
ரூர்கேலா எஃகு உற்பத்திச்சாலை	7,20,000
பிலாய் எஃகு உற்பத்திச்சாலை	7,50,000
பிரிட்டிஷ் எஃகு உற்பத்திச்சாலை	7,50,000

3517 குழாய்க் கிணறுகள்

அதிக அளவில் அமைக்கப்பட்ட மாநிலங்கள் யாவை?

முதலாவது ஐந்தாண்டுத் திட்டப்படி பல்வேறு மாநிலங்களிலுமாக மொத்தம் 3,517 குழாய்க் கிணறுகள் இதுவரையில் அமைக்கப்பட்டிருக்கின்றன.

அதிக அளவில் அமைக்கப்பட்ட மாநிலங்கள் விவரம் கீழே தரப்படுகிறது:—

உத்திரப் பிரதேசம்,	1,599
பீகார்	682
பஞ்சாப்	670
பெப்சு	388
பம்பாய்	178

இக்கிணறுகளை அமைப்பதற்காக இந்திய சர்க்கார் ரூ. 10,71,45,000 அனுமதித்திருக்கின்றனர்.

10,000 ஜெர்மன் துருப்புகள்

ரஷ்யாவில் சிறைப்பட்டுள்ளனராம்

அடினர் - புல்கானின் பேச்சுவார்த்தைகளில் 'கசப்பா'ன நிகழ்ச்சி

மாஸ்கோ, செப். 11—

ரஷ்யாவிற்கு அழைப்பின் பேரில் வருகை தந்துள்ள மேற்கு ஜெர்மன் அதிபர் டாக்டர் அடினரிடம் சோவியத் பிரதமர் மார்ஷல் புல்கானின், ரஷ்யாவில் சிறை வைக்கப்பட்டிருக்கும் ஜெர்மன் யுத்தக் கைதிகள் பிரச்சினை பற்றி, கிழக்கு ஜெர்மன் பிரதிநிதிகளின்றி விவாதிக்க முடியாது என்று கூறிவிட்டதாகத் தெரிகிறது.

சுமார் 10,000 ஜெர்மானியர்கள் ரஷ்யாவில் சிறை வைக்கப்பட்டிருப்பதாயும், அவர்கள் எல்லாம் யுத்தகால கைதிகள் அல்லவென்றும், அவர்கள் யுத்தக் குற்றவாளிகள் என்றும் புல்கானின் தெரிவித்திருக்கிறாராம்.

யுத்தக் கைதிகள் பற்றிய பிரச்சினையில், டாக்டர் அடினரும்—சோவியத் தலைவர்களும் கசப்பான பரிமாற்றங்கள் செய்துகொண்டனர் என்றும், டாக்டர் அடினர் இந்தப் பிரச்சினையை மனிதாபிமானத்துடன் கவனிக்குமாறு கூறியதாகவும், இவ்வாறு அவர் கூறியது விரோதமூட்டும் பேச்சு என்று கம்யூனிஸ்டு செயலாளரான நிகிதா குருஷ்சேவ் கூறியதாகவும் தெரியவருகிறது

கிழக்கு ஜெர்மன் பிரதிநிதிகளின்றி பிரச்சினை பற்றி பேசவே முடியாது என்று புல்கானின் மறுத்துவிட்டதாகவும் தெரியவருகிறது.

ஜெர்மன் யுத்தக் கைதிகளில் 9,626 பேர்களைத் தவிர இதரர்களை எல்லாம் விடுவித்துவிட்டதாகவும், சிறை வைக்கப்பட்டுள்ள ஜெர்மன் துருப்புகள் தண்டிக்கப்பட்டது, அவர்கள் சோவியத் எல்லையில் புரிந்த கொடுமைகளுக்கான தண்டனைக்காகத்தான் என்றும், மேலும் அவர்கள் தண்டிக்கப்பட்டது, மனிதாபிமானத்திற்கு உட்பட்ட செயல்தான் என்றும் புல்கானின் தெரிவித்தாராம்

உடனே அடினர், இட்லரின் துருப்புகளில் சிலர் சோவியத் எல்லையில் கொடுமைகள் புரிந்தது உண்மைதான் என்றும், ஆனல், சோவியத் துருப்புகளும் ஜெர்மன் எல்லையில் 'சோவியத்திற்கு தாங்கள் செய்யவேண்டிய புனிதமான கடமை' என்ற பெயரினல் கொடுமைகள் பல புரிந்ததும் உண்மை என்றும் கூறினாராம்.

உடனே குருஷ்சேவ் குறுக்கிட்டு, டாக்டர் அடினர் சோவியத் துருப்புகள் பற்றி விரோதமான கருத்தறிவித்திருப்பதாக தான் நினைப்பதாக அடினரிடம் தெரிவித்தாராம்.

'காதலனை'க் கைவிடும் இளவரசி!

லண்டன், செப். 11—

பிரிட்டிஷ் ராணியின் தங்கையான இளவரசி மார்கரெட், அவரது காதலர் என்று வர்ணிக்கப்பட்ட இராணுவ அதிகாரியான 'டௌன்சென்ட்' என்பாரை ஏற்கனவே யூகித்தறிவிக்கப்பட்டபடி திருமணம் செய்துகொள்ளப்போவதில்லை என்று லண்டனிலிருந்து வெளிவரும் பத்திரிகை ஒன்று எழுதியிருக்கிறதாம்.

டௌன்சென்டிற்கு இதுவிஷயம் அதிகாரபூர்வமாக பல கிழமைகளுக்கு முன்பே அறிவிக்கப்பட்டுவிட்டதாம்.

பிரிட்டிஷ் அரச குடும்பத்தின் பாரம்பரியத்தைப் பாழ் செய்ய மறுத்ததுடன், மார்கரெட், இங்கிலாந்து மாதாகோவிலின் சட்டங்களை மீற விரும்பவில்லை என்றும் தெரிவித்துவிட்டாராம்.

இது பற்றி அதிகாரபூர்வமான அறிக்கை எதும் வரவில்லை.

ஏனெனில், இருவருக்கும் இடையே அப்படி'காதல்' தோன்றியிருக்கிறது என்பதை ஒப்புக்கொள்ளவே அதிகாரிகள் மறுத்துவிட்டனராம்

டௌன்சென்ட், தான் நிச்சயம் மார்கரெட்டை மணந்துகொள்ள முடியும் என்றும், அரச குடும்பத்தாரும், மக்களும் காலப்போக்கில் திருமணத்திற்குச் சம்மதித்துவிடுவர் என்று நம்பியிருந்தார் என்றும் அந்த இதழ் கூறுகிறது.

மாணவர்களின் பொது அறிவு!

துணைவேந்தர் மனவருத்தம்

மைசூர், செப். 11—

"வினேபா பாவே என்பவர் யார்?" என்று, மைசூர் பல்கலைக் கழக மாணவர்களின் பொது அறிவைச் சோதிப்பதற்காகக் கேள்வி ஒன்று கேட்கப்பட்டதாம்!

அதற்குப் பதிலளித்த ஒரு மாணவரின் பதில், இன்றைய மாணவர்களின் நிலைமையை நன்கு எடுத்துக்காட்டுவதாக உள்ளதென்று பத்திரிகைகளில் வெளிவந்தசெய்தி ஒன்று கூறுகிறது.

"இந்தியாவின் பிரதமரான நேரு பிறந்த ஊரான டில்லியில் உள்ள ஒரு கட்டிடத்தின் பெயர் வினேபா பாவே"

என்பதுதான் அந்த மாணவர் கூறிய பதிலாம்!

இந்தத் தகவலை வெளியிட்டதாகக் கூறப்படும் அப்பல்கலைக் கழகத் துணைவேந்தர் டி'சௌசா, அறிவை விருத்தி செய்துகொள்வதில் மாணவர்களிடை நிலவும் அசிரத்தைபற்றி வருந்தியதுடன், இந்த நிலைமையை உடனடியாகச் சீர்செய்ய வேண்டுமென்றும் வற்புறுத்தினராம்.

சிந்திரி இரசாயன உர உற்பத்திச்சாலையில் 'யூரியா' உற்பத்திச் சாலையொன்றை நிர்மாணிப்பது சம்பந்தமான ஆயத்த வேலைகள் முடிவடைந்துவிட்டன. நிர்மாண வேலை சீக்கிரத்திலேயே ஆரம்பமாகி 1957-ம் ஆண்டு இறுதிவாக்கில் முடிவடைந்து விடுமென்று எதிர்பார்க்கப்படுகிறது.

தோழர் கோவிந்தசாமி எம். எல். ஏ.

தொண்டையில் ஏற்பட்ட இரணம் காரணமாக, சென்னை ஸ்டான்லி மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டுச் சிகிச்சை பெற்றுவரும் தோழர் ஏ. கோவிந்தசாமி எம். எல். ஏ. அவர்கள், இன்னும் பத்துத் தினங்களுக்குமேல் சிகிச்சையிலிருக்க வேண்டியிருப்பதால் ஏற்கனவே ஒத்துக்கொண்ட நிகழ்ச்சிகள் எதிலும் கலந்துகொள்ள இயலாதவராயிருப்பதாகத் தெரிவித்துக்கொள்கிறார்.

பனமா கப்பல் 'கைது'

ஆயுதம் ஏற்றிச் செல்வதாகச் சந்தேகிக்கப்பட்டு சோதனை

கொழும்பு, செப். 11—

பனமா நாட்டைச் சேர்ந்த 'காட்டரினு' என்னும் கப்பல், சீனவுக்கு ஆயுதங்கள் ஏற்றிச் செல்வதாகச் சந்தேகிக்கப்பட்டு, கொழும்பு துறைமுகத்தில் 'காவலில்' வைக்கப்பட்டிருக்கிறது. பெட்ரோலை நிரப்பிக் கொள்வதற்காகத் துறைமுகத்தை வந்தடைந்த சில மணி நேரத்திற்குள் இந்நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதாம்.

895 டன் பொதுப்படையான சாமான்களே கப்பலில் இருப்பதாகவும், ஆயுதங்களேதும் கிடையாதென்றும் கப்பலின் தலைவர் சுங்க அதிகாரிகளிடம் கூறியுள்ளார்; எனினும், அங்குள்ள அமெரிக்கத் தூதுவராலயத்தைச் சேர்ந்த அதிகாரிகள் பரிசோதனை நடத்துவதற்கு அவர் இசைந்துள்ளார்; ஆயினும், சரக்குகளின் பட்டியலைத் தர மறுத்துள்ளார்.

அமெரிக்க அதிகாரிகளுடன் சுங்க அதிகாரிகளும் சேர்ந்து ஒவ்வொரு பெட்டியையும் உடைத்துத் திறந்தபோது, அவைகளில் மருந்துகளும், வாசனை சோப்புகளுமே காணப்பட்டனவாம்!

நூதனமான இரண்டடுக்கு மூன்றாவது வகுப்பு இரயில் பெட்டிகள் 1863-ம் ஆண்டு வாக்கில் பம்பாய் பரோடா—மத்திய இந்திய இரயில்வேயிலும், கிழக்கு இந்திய இரயில்வேயிலும் உபயோகிக்கப்பட்டு வந்தன. அந்தப் பெட்டிகளின் மேல் அடுக்கில் பிரயாணிகள் உட்காருவதற்கு பெஞ்சுகள் கிடையாது. எல்லாப் பிரயாணிகளும் தரையில் உட்கார்ந்துகொண்டுதான் பிரயாணம் செய்ய வேண்டும்; மூன்றாவது வகுப்புப் பிரயாணம் இப்பொழுது எவ்வளவு மாறிவிட்டது?

****

தலைமைக் கழகம்: அறிக்கை—27/55

தி. மு. கழக ஆண்டு விழாவும்— நாட்டுப் பிரிவினை வாரமும்

திராவிட முன்னேற்றக் கழகம் தோற்றங்கொண்டு, ஆறு ஆண்டுகளைக் கடந்து, ஏழாவது ஆண்டில் அடி எடுத்துவைக்கும் பெருமைகொள் விழா 17—9—55-ஆம் நாளன்று நடைபெறவிருக்கிறது.

17—9—55-ஆம் நாளிலிருந்து 23—9—55-ஆம் நாள் வரையிலுள்ள ஒரு வார காலத்தைத் திராவிட நாடு பிரிவினை வாரமாகக்கொண்டு, தி. மு. கழக ஆண்டு விழாவை மிகச் சீரிய முறையில், ஆங்காங்குள்ள தி. மு. கழகக் கிளைகளும், தி. மு. கழகத்திற்குச் சார்புடைய அமைப்புகளும் கொண்டாடுவனவாக!

தி. மு. கழகக் கொள்கைகளை விளக்கியும், கழகம் ஆற்றிய தொண்டுகளை எடுத்துக்கூறியும், திராவிட நாட்டுப் பிரிவினைத் திட்டத்தை வலியுறுத்திச் சொல்லியும் துண்டு அறிக்கைகள் வெளியிட்டு—தட்டிகள் எழுதி வைத்து—ஊர்வலங்கள் நடத்தி—பொதுக்கூட்டங்கள் கூட்டிக் கழகத் தோழர்கள் கொண்டாடுவார்களாக!

இயன்றுல் கொள்கை விளக்க இசையரங்குகளும்—நாடகங்களும் இலவசமாக நடத்திக்காட்டுவார்களாக!

'அறிவகம்', சென்னை-13
27—8—55

இரா. நெடுஞ்செழியன்,
பொதுச்செயலாளர், தி. மு. க.

****

ஆசிரியருக்குக் கடிதம்:

'உலக வரலாற்றில் நாம்!'

ஆசிரியர்: 'நம் நாடு',
ஐயா,

சென்ற திங்கள் மதுரை தியாகராசர் கல்லூரி மன்றப் பேரவையில் அண்ணா அவர்கள் வருகை தந்து, வாழ்ந்த நாம் வீழ்ந்த நிலை மாறி, உலக வரலாற்றில் இடம் பெற நாம் தனி அரசு பெறவேண்டிய அவசியத்தை எடுத்தியம்பிச் சென்றார்கள்.

அமெரிக்கா சென்றுள்ள நண்பர்-எஞ்சினீயர் ஒருவர் ஒரு படம் அனுப்பியுள்ளார்; அதைப் பார்க்கும்போது, 'உலக வரலாற்றில் நாம், இன்று, இந்த நிலையிலா தாழ்வாகக் கருதப்பட்டுக் கிடக்கிறோம்?' என்று எண்ணி மனம் வெதும்ப வேண்டியிருக்கிறது.

அங்கு, 'சிகாகோ இயற்கை வரலாற்றுக் காட்சிக்கூட'த்தில் சான்கே மெமோரியல் மண்டபத்தில் தமிழர் ஒருவர் கள் இறக்கப் பனைமரமேறும் காட்சியை வெண்கலத்தில் சிலை வடித்து, பார்வைக்கு வைத்துள்ளார்களாம்; அச்சிலையை அப்படியே புகைப்படம் எடுத்து, அக்காட்சிக்கூடத்தார் விலைக்குத் தருகிறார்களாம்; அப்படத்தை நண்பர் அனுப்பியிருக்கிறார், வருத்தத்தோடு!

அதிலே, அந்தச் சிலைக்குண்டான விளக்கத்தையும் அக்காட்சிச்சாலையார் குறிப்பிட்டுள்ளார்கள் இப்படி:—

"TamilTree-climber — Sculpture in bronze by Malvina Hoffman: The Tamils are a mixture of White and Negro stocks and have dark-brown skin and wavy hair."—இது தான் அந்தக் குறிப்பு.

வெள்ளையருக்கும் நீக்ரோவருக்கும் சேர்ந்து தோன்றிய ஒரு கலப்பட இன மக்களாம், தமிழர்களாகிய நாம்! விந்தையான வரலாறு! விபரீதமான—ஆனல் வேதனைப் படவேண்டிய விளக்கம்!

ஒரு காலத்தில் அமெரிக்கா கண்டமே கண்டுபிடிக்கப்படாத நிலையிலுள்ளபோது, தேம்ஸ் நதி தீரத்தில் வெள்ளையர் மீன்பிடித்து புசித்துக் காலம் கடத்தி வாழ்வு நாடாத்திய காலை, நாம் உலகிற்கே நாகரீகம் போதிப்பவர்களாய்-வீரம் செறிந்த தீரர்களாய்-அரசு கண்ட அறிவுடையோராய் வாழ்ந்தோம் என்பதை அவர்கள் அறியார் போலும்!

யவனம், சாவகம், புட்பகம், சீனம் சென்ற கடாரம் வென்ற தமிழர்களுக்கு இன்று உலக வரலாற்றிலே பொருள்—பிற நாட்டினர், தமக்கும் விலங்கினத்திற்கும் வேற்றுமை தெரியாது வாழ்ந்த போது ரோமுக்கு, கிரேக்கத்திற்கு கலம் செலுத்தி மஸ்லின் துணி, மிளகு இன்னபிற பொருள்களை அனுப்பி வாணிபம் செய்து மேலோங்கித் திகழ்ந்த தமிழர்களுக்கு—கனக விசயரின் நாத்தடுக்கை அடக்கி, கல் சுமத்தி, இமயத்திலே கொடி பொறித்த நற்றமிழ்ப் பெருமக்களுக்கு மேலை வரலாற்றிலே இன்றுள்ள விளக்கம்—'நீக்ரோ-வெள்ளை மாந்தரின் கலப்பினமே தமிழர்' என்பதாம்!

அந்த அளவிற்கு நாம் உலக வரலாற்றிலிருந்து தள்ளப்பட்டுவிட்டோம்! அதே நண்பர், தாஜ்மகால் உருவப்படத்தையும் (அக்காட்சிச்சாலையில் உள்ளது) அனுப்பியுள்ளார்; அதிலே மட்டும் அந்த வரலாறு சரியாக இருக்க தமிழர் வரலாறு மட்டும் இழிவாக எழுதப்பட்டுள்ளதேன்?

நீக்ரோக்களெங்கே! வெள்ளையர்களெங்கே! தமிழர்களெங்கே! அவர்கள் காலம் யாது? நம் காலம் யாது? 150 வருடங்கட்கு முன் வந்த இங்கிலாந்து வெள்ளையர்கட்கும், 5,000 ஆண்டுகட்கு முன்பு ஆடோட்டி வந்த மத்தியாசிய ஆரியர்கட்கும் முன்பே உள்ள தமிழ்ப் பெருங்குடி மக்களல்லவா நாம்! 'ஆரியன் கண்டாய்—தமிழன் கண்டாய்' என்றுதானே வெள்ளை ஆரியனையும், தமிழரையும் தனித்துக் காட்டிப் பாடிப் போந்தனர்! 'கல் தோன்றி மண் தோன்றாக் காலத்தே முன் தோன்றி மூத்தகுடி' அல்லவா நாம்! அந்தோ தமிழகமே! ஐயகோ! இன்று இதுவா உன் நிலை?!

பழந்தமிழ்ப் பெருங்குடிமக்களே! கொலுபீடத்தவரே! கோலோச்சவோரே! இனியும் வாழாவிருத்தல் நன்றன்று! உடனடியாக அங்கு—அமெரிக்காவில், சிகாகோ மியூசியத்தில் தமிழர் பற்றிய தவறான வரலாற்றை மாற்ற ஆவன செய்வீராக! உண்மையை நிலைநாட்டுவீராக! நிலைபெறச் செய்வோமாக!

சே. சி. இராமசாமி
மதுரை: 2—9—55

செய்திச் சுருள்

★

பாரதியார் விழா

சென்னை — பெத்துநாய்க்கன் பேட்டை தாய்மார் கழகத்தில், 10—9—55 பிற்பகல் 3 மணிக்கு 'பாரதி விழா' திரு. மயிலை சிவமுத்து தலைமையில் நடைபெற்றது. திரு. ஜி. பக்தவத்சலம், 'பாரதியும் - தமிழ் உணர்ச்சியும்' என்பது பற்றிச் சொற்பொழிவாற்றினர். மற்றும் தோழியர் சுந்தராம்பாள், சாரதாம்பாள், பார்வதி அம்மையார் ஆகியோர் பாரதியின் குண நலன்களைப் பற்றியும், கவிநயம் குறித்தும் பேசினர்.

தலைவர் தமது முன்னுரையில், செப்டம்பர் திங்கள் தமிழகத்திற்கோர் 'துன்பத் திங்கள்' என்று கூறி, அத்திங்களில்தான், தமிழ்ப் பெரியார்கள் மறைமலை அடிகள், திரு. வி. க ஆகியோரும் இயற்கை எய்தினர் என்றுகூறி, பாரதியாரின் வாழ்க்கை வரலாற்றையும், கொள்கைகளையும் விரிவாக எடுத்துக் கூறினர்.

திருமணங்கள்

★

4—9—55 காலை 9 மணி அளவில், சென்னை, நம்மாழ்வார் பேட்டை, சுப்பராய செட்டி 2-வது தெரு, எண் 12-ஏ மணமகன் இல்லத்தில், தோழர் கே. பழனி—தோழியர் அம்சாபாய் திருமணம் தோழர் டி. எஸ். வேலன் தலைமையில் நடைபெற்றது. தோழர்கள் கண்ணதாசன், முகவை ஆர். எஸ். பாண்டியன், அ. தி. பாலன் ஆகியோர் சொற்பொழிவாற்றினர்.

• • •

31—8—55 காலை 9 மணிக்கு, திருவாரூர், 5, கோவில்தரையான் சந்து மணமகன் இல்லத்தில் தோழர் எஸ். சுப்பிரமணியன்—தோழியர் தனவரம் திருமணம், தோழர் விஜயராகவன் தலைமையில் நடைபெற்றது. மணமக்களை வாழ்த்தித் தோழர்கள் சி. பி. சிற்றரசு, பக்கிரிசாமி, செல்வராசு ஆகியோர் சொற்பொழிவாற்றினர். இத்திருமண நினைவாக 'நம் நாடு' இதழ் வளர்ச்சிக்கு ரூ. 2 நன்கொடை தரப்பட்டது. வரப்பெற்றோம் — நன்றி — பொறுப்பாளர்.

• • •

31—8—55-ல் அறந்தாங்கி தோழர் ராமசாமி — தோழியர் சாரதாம்பாள் திருமணம், தோழர் டி. கே. சீனிவாசன் தலைமையில் நடைபெற்றது. திருந்திய திருமணம் பற்றியும், பண்டைய—இன்றைய திருமணம் பற்றியும் தோழர் டி. கே. சீனிவாசன் சொற்பொழிவாற்றினர்.

அனுதாபம்

25—8—55-ல், திருப்பத்தூர் (வ. ஆ.) தி. மு. கழகத் தோழர் இர. கைலாசனுடைய தாயார் சின்னகண்ணம்மாள் நோய்வாய்ப்பட்டு இயற்கையுற்றமைக்கு கிளைக் கழகச் சார்பில் அனுதாபம் தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

பாரதி விழாவில் அண்ணா

[1-ம் பக்கத்தின் தொடர்ச்சி]

கவிதைகளை வடித்துத் தந்தவன்; அந்த பாரதியை, 'தங்களவர்' என்று சொந்தம் கொண்டாடுபவர்கள் பாராட்டுவதைவிட, நாங்கள்—எங்கள் போன்றோர் பாராட்டுவதுதான் அதிகச் சிறப்புடையது;

"மேலும், நாங்கள் பாரதியைப் பற்றிப் பேசுவதற்குரிய மற்றொரு உரிமை, நாங்கள்தான் பாரதியின் பெயரால் பலன் எதும் பெறாதவர்கள்; பெற முயற்சிக்காதவர்கள்; பெற விரும்பாதவர்கள்;

"இன்று, நாட்டில் பலர், பாரதியின் பெயரை வியாபாரமாகப் பயன்படுத்துகின்றனர்; அவர்களைப்போல் நாங்களும் பாரதியின் பெயர் கூறி எந்தச் செல்வாக்கையும், பிரதிபலனையும் எதிர்பாராதவர்கள்; பிறர் பாராட்டுவதைப்போலன்றி, நாங்கள், உண்மையிலேயே பாரதியின் கவிதைகளில் எங்களுக்குள்ள ஆர்வத்தால் பாரதியைப் பாராட்டுகிறோம்;

"பாரதியின் உண்மையான கருத்துக்கள் நாட்டில் மறைக்கப்பட்டுள்ளன, அந்த உண்மையான கருத்துக்களை நாட்டவருக்கு நாங்கள் சொல்பவர்களாயிருப்பதால், பாரதி விழாவில் கலந்து கொள்வதில் பெருமையும் அடைகிறோம்—கலந்து கொள்ள உரிமையும் பெறுகிறோம்;

"மேலும், பாரதியின் நல்ல வாளாகவும், வேலாகவும் விளங்குகிற பாரதிதாசன், எங்களிடமுள்ளவர்; பாரதி இன்று உயிருடனிருந்திருந்தால், அவர், இன்று பாரதிதாசனையும் கூடச் சேர்த்துக்கொண்டு, நாட்டில் ஒரு பெரும் 'சமூகப் புரட்சி'யை மேற்கொண்டிருப்பார்;

"பாரதியாரைப் போன்றவர்கள்தான் 'மக்கள் கவிஞ'ராக இருக்க முடியும்; கவிஞர்கள் பலர், பாரதியாருக்கு முன்பு இந்த நாட்டில் இருந்திருக்கிறார்கள்; அவர்களை எல்லாம், நாம், 'மக்கள் கவிஞர்' என்று பெயரிட்டு அழைப்பதில்லை; நம்முடைய நாட்டில் மட்டுமின்றி, உலகெங்கணும் கவிஞர்கள் பலர் இருந்திருக்கின்றனர்; ஆனால், எல்லோரும் மக்கள் கவிஞர்களாயிருந்ததில்லை;

"இந்த நாட்டில் கவிஞர்கள் என்றால், 'அவர்கள், ஆண்டவரால் அளிக்கப்படுகிறார்கள்—அவர்கள் எல்லாம் ஆண்டவனின் அருளாளர்கள்' என்றுதான் மக்களுக்குக் கூறப்பட்டதேயன்றி, 'கவிஞர்கள் தங்களது திறத்தால், ஆர்வத்தால், எழுச்சியால், அறிவினால் கவிஞர்களாகின்றனர்,' என்று கூறப்படுவதில்லை;

"மற்றவர் கண்களுக்குத் தெரியாத காட்சிகள் எல்லாம் கவிஞர்களது கற்பனைக் கண்களுக்குத் தெரியும்; நம் கண்களுக்கு வானம் தெரியும்—கவிஞர்களுக்கு அதன் வண்ணமும் தெரியும்; நமக்குக் கடல் தெரியும்—அவர்களுக்கு அந்தக் கடல் அலையின் கருத்தும் தெரியும்; நமக்குக் கட்டிடம் தெரியும்—அவர்களுக்கு கட்டிடத்தின் உள்ளிருக்கும் பொருளையும் ஊடுருவிப் பார்க்கத் தெரியும்;

"இப்படி, நல்ல அறிவுத் திறனும், கற்பனை சக்தியும் படைத்தவர்கள் கவிஞர்களாகின்றனர்;

"ஆனால், மக்கள் கவிஞர்களாக எல்லோரும் இருப்பதில்லை; ஏன்?

"பாரதிக்கு முன்பு இந்த நாட்டில் இருந்த கவிஞர்கள், மக்களுக்காகத்தான் பாடினார்கள்—ஆனால், மக்களைப் பற்றிப் பாடவில்லை;

"கம்ப இராமாயணமும், பாரதமும், தேவாரமும் மக்களுக்காகப் பாடப்பட்டவையாயிருக்கலாம்; ஆனால், மக்களைப் பற்றிய—மக்களின் பிரச்சினைகளைப் பற்றியவையாயிருக்கவில்லை, அவை!

"மக்களுக்கு மகேசனைப் பற்றியும், அவனது அருமை பெருமைகளைப் பற்றியும், அவனது அருட்தன்மை குறித்தும் விளக்குவதற்காக—மகேசன் புகழ் பாடுவதற்காக கவிதைகளை எழுப்பியவர்கள் உண்டு; ஆனால், மக்களையும், மக்கள் பிரச்சினைகளையும் பற்றிப் பாடிய கவிஞர்கள் இருக்கவில்லை;

"பாரதிக்கு முன்பிருந்த கவிஞர்கள் தங்கள் கவிதைத் திறனை—கற்பனை சக்தியை கடவுளைப் பற்றியும், ஜீவாத்மாவுக்கும்—பரமாத்மாவுக்கும் உள்ள தொடர்பு பற்றியும் எடுத்துக் கூறத்தான் பயன்படுத்தினார்கள்;

"பாரதிதான், மக்களைப் பற்றி—மக்களின் பிரச்சினைகளைப் பற்றி—அவர்களது வாழ்க்கை நிலைபற்றி—உள்ளம் பற்றி எல்லாம் பாடினார்; எனவேதான், பாரதியை 'மக்கள் கவிஞர்' என்று கூறுகிறோம்;

"ஒரு காலத்தில், மக்கள் என்ற சொல் கேலிக்குரியதாக இருந்தது; ஆனால், இன்று அந்தச் சொல், ஒரு புதிய சக்தி பெற்றதாக நாட்டில் விளங்குவதைக் காண்கிறோம்;

"அந்தச் சொல், அந்த புதிய சக்தியைப் பெறுவதற்காக எத்தனையோ கஷ்ட நஷ்டங்கள்—இடர்ப்பாடுகள்—இன்னல்களை எல்லாம் மக்கள் ஏற்றுக்கொண்டிருக்கின்றனர் என்பதை வரலாறு நெடுக படிந்துள்ள இரத்தக் கறை சொல்லும்;

"மக்கள் என்றால், வெறும் உருவத்தில் மட்டும் மக்கள் இருக்கவில்லை; உருவமும், உள்ளமும், அந்த உள்ளம் வளரும் தன்மையும் சேர்ந்துதான் மக்கள் உருவாகின்றனர்.

"கேலிக்குரியதாகக் கருதப்பட்ட சொல், இன்று புதிய சக்தி பெற்ற பிறகு, பயன்மிகுந்த அடைமொழியாகவும் விளங்குகின்றது; 'மக்கள் தலைவர், மக்கள் கவிஞர், மக்கள் கட்சி' என்று பெருமைக்குரிய சொல்லாக விளங்குகிறது;

"பாரதியார், மக்கள் கவிஞரெனப் போற்றப்படுவதற்கு, அவர் மக்களின் உருவங்களை மட்டுமின்றி அவர்களது உள்ளங்களையும் பார்த்தார்;

"'அஞ்சி அஞ்சிச் சாவார் — இவர் அஞ்சாத பொருளில்லை,' 'நெஞ்சு பொறுக்குதில்லையே — இந்த நிலைகெட்ட மாந்தரை நினைந்துவிட்டால்,' என்று பாடினார் பாரதி;

"'மக்கள் அஞ்சுகிறார்கள்—தினம் தினம் சாகிறார்கள்—மீண்டும் பிழைக்கிறார்கள், மறுபடியும் சாவதற்காக! வீரர்கள் ஒருமுறை, வாழ்வில் சாகின்றனர்—இந்த நாட்டு மக்களோ, அஞ்சி அஞ்சிச் சாகிறார்கள்' என்று பாரதி பாடுகின்றார்;

"இப்படி, மக்களின் நிலையை எண்ணி, 'அந்த நிலை மாற வேண்டும்' என்று கருதிய மக்கள் கவிஞர், பாரதி!"

—என்று, தோழர் சி. என். அண்ணாதுரை அவர்கள், சென்னை இராயபுரத்தில் உள்ள இரயில்வே கலைமன்றத்தின் சார்பில் நடைபெற்ற பாரதி விழாவில் பேசுகையில் குறிப்பிட்டார்.

[பேச்சு முடியவில்லை தொடர்ந்து நாளை வெளிவரும்]

நேருவின் வண்டிமுன் பாய்ந்த வாலிபன்!

'நியாயமான தீர்ப்பு' கிடைக்கவில்லையென முறையீடு!

பன்னா, செப். 12—

விந்தியப் பிரதேசத்தில் சுற்றுப் பயணம் செய்த நேரு, பொதுக் கூட்டமொன்றில் பேசிவிட்டுத் திரும்புகையில், திடீரென ஒரு வாலிபர் அவருடைய காருக்கு முன்னால், பாதையில் படுத்துக் கொண்டார்.

உடனே பண்டிதர் காரிலிருந்து கீழே இறங்கிவந்து, 'எதற்காகக் காரின்முன் படுத்துக்கொண்டாய்? அப்படிச் செய்யுமாறு உன்னை யாராவது தூண்டினார்களா?' என்று கேட்டுள்ளார்.

'நீதிமன்றத்தில் என் மீது நடைபெற்ற வழக்கில், எனக்கு நியாயமான தீர்ப்பு வழங்கப்படவில்லை; உங்களிடம் அதைத் தெரிவிக்கவே, நான் இவ்வாறு செய்தேன்,' என்று அவ்வாலிபர் கூறியுள்ளார்.

அப்போதுதன்னுடனிருந்த விந்தியப் பிரதேச சட்ட மந்திரியிடம் அதுபற்றி விசாரிக்கும்படி நேரு கூறினாராம்.

காமராசர் ஆந்திரா வருகை

இராஜமகேந்திரபுரம், செப். 12—

சென்னை முதன் மந்திரி காமராசர் வரும் செப். 18-ந் தேதியன்று மிக ஆர்வமாக ஆந்திராவின் இந்தப் பகுதிக்கு வருகை தருகிறார்.

இங்கு நடைபெறவிருக்கும் அகில இந்திய கதர், கிராமத் தொழில் கண்காட்சி ஒன்றைத் திறந்து வைப்பதற்காக அவர் வருவதாகத் தெரிகிறது.

நிகழ்ச்சி

சென்னை-இராயபுரத்தில் உள்ள இரயில்வே (இன்ஸ்டிட்யூட்) கலை மன்றத்தின் சார்பில், 12—9—55 மாலை 5½ மணி அளவில் பாரதி விழா சிறப்புறக் கொண்டாடப் பெற்றது.

மன்றச் செயலாளர் தோழர் இரா. சாம்பசிவம் வரவேற்புரை நிகழ்த்தினார்.

பின்னர், தோழர் பி. சுப்பிரமணியம் விழாவிற்குத் தலைமை ஏற்று சிறிது நேரம் பேசினார்.

இதற்குமுன் வாழ்த்துப் பாடல் பாடப்பட்டது.

பின்னர், அண்ணா அவர்கள், 'மக்கள் கவிஞன்' என்னும் பொருள் குறித்து அரியதோர் கருத்துரை நிகழ்த்தினார்.

அண்ணா அவர்களுக்கும், தலைவருக்கும் இராயபுரம் இரயில்வே கலை மன்றம், இரயில்வே குமாஸ்தாக்கள் சார்பில் தோழர்கள் இராஜகோபால், கே. என். கோபால் ஆகியோராலும், மற்றும் சில நிறுவனங்கள் சார்பிலும் மலர்மாலைகள், கைத்தறி ஆடை அணிவிக்கப்பட்டன.

தலைவர் முடிவுரையுடன் நன்றி நவின்ற பிறகு கூட்டம் முடிந்தது (க. தி.)

மத்திய பாரதம் 'துண்டாடப்'படும்?

தலைவர்களிடை மனக்கலக்கம்!

இந்தூர், செப். 12—

மாநில புனரமைப்புக் குழுவின் சிபாரிசுகளை ஒட்டி, மத்திய பாரதம் துண்டாடப்படுமென நிச்...

தி. மு. க. பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன் காங்கயம் வருகை

19—9—55 மாலை 6 மணிக்கு, காங்கயம் மதார்சா சாயபு பேட்டையில், பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்களுக்கு வரவேற்பும், தோழர் எம். வேலுசாமி தலைமையில் தி. மு. கழக ஏழாவது ஆண்டு விழாப் பொதுக்கூட்டமும் நடைபெறும்.

திருமணம்

14—9—55 காலை 9 மணிக்கு, திருவிடைமருதூருக்கும்—ஆடுதுறைக்கும் இடையிலுள்ள கோவிந்தபுரம் மணமக்கள் இல்லத்தில், தோழர் ஜி. எஸ். மகாலிங்கம்—தோழியர் எம். கமலா மகிழன் திருமணம், அண்ணா அவர்கள் தலைமையிலும், தோழர் கே. ஆர். இராமசாமி முன்னிலையிலும் நடைபெறும். தோழர்கள் இராம. அரங்கண்ணல், எம். ஜி. இராமச்சந்திரன், எஸ்.எஸ். இராசேந்திரன், டி.வி.நாராயணசாமி, எம். என். கிருஷ்ணன் ஆகியோர் வாழ்த்துரை வழங்குவர்.

மாதுங்கா தி. மு. கழக செயற்குழு உறுப்பினர்கட்கு

19—6—55 பகல் 2 மணிக்கு மாதுங்கா தி. மு. கழகச் செயற் செயற் குழுக் கூட்டம், லைன் அவுசிங் போர்ட் டி 15. 18-ஏ. 161-ம் இல்லத்தில் நடைபெறும்.

முதல் இடமாம்!

ஜப்பானிய முறையில் அதிக நிலங்களைச் சாகுபடிக்குக்கொண்டு வரும் பிரச்சினையில், இந்தியா முழுவதிலும் சென்னைக்குத்தான் முதலிடம்,' இருக்கிறதாம்.

1954—55-ல், 4,89,181 ஏகராக்களில் ஜப்பானிய சாகுபடி முறை சென்னையில் கையாளப்பட்டதாம்.

இந்தியா முழுவதிலும் 11,92,461 ஏகராக்கள், ஜப்பானிய சாகுபடி முறையின் கீழ் கொண்டுவரப்பட்டதாகக் கூறப்படுகிறது.

இம்முறையின் கீழ், ஐதராபாத் இரண்டாவது இடம் பெறுகிறதாம்; 1,65,652 ஏகராக்களில் இம்முறை கையாளப்படுகிறது.

மலிவாக மின்சாரமாம்!

'சிறு தொழில்கள், குடிசைத் தொழில்கள், விவசாய வேலைகள் ஆகியவற்றுக்கு மின்சாரம் சக்தி குறைந்த விலையில் வழங்கப்படும்,' என்று ராஜ்யங்கள் சபையில் அறிவிக்கப்பட்டுள்ளது.

சயமாகக் கருதப்படுகிறதாம்!

இதனால், இங்குள்ள தலைவர்களிடை ஏமாற்றமும் கவலையும் ஏற்பட்டுள்ளதாம்.

மத்திய பாரதத்தை இரண்டாகப் பிரித்து, ஒரு பகுதியை மத்தியப் பிரதேசத்துடனும், மறு பகுதியை உத்திரப் பிரதேசத்துடனும் இணைத்துவிட்டு, 'மத்திய பாரதம்' இல்லாமலே செய்துவிட மாநில புனரமைப்புக் குழு 'சிபாரிசு' செய்துள்ளதாகக்கூறப்படுகிறது.

கழகக் கூட்டம்

சென்னை

39-வது வட்ட தி. மு. கழக 4 வது ஆண்டு விழா

எல்லீஸ் ரோடு, அப்பாவு கிராமணி தெருவில்

14—9—55 மாலை 6 மணிக்கு

தலைவர்: மா. மோகன்

பேசுவோர்:

கி. மனோகரன்

இளம்பரிதி

கே. கிருஷ்ணசாமி

பொதுக்கூட்டம்

14—9—55 மாலை 6 மணிக்கு சென்னை—சேப்பாக்கம், வெங்கடேச நாயக்கன் தெருவில், தோழர் கா. அப்பாதுரை தலைமையில், டாக்டர் சி. நடேசன் மன்றச் சார்பில் நடைபெறும். தோழர்கள் ஏ. வி. பி. ஆசைத்தம்பி, கே. ஆர். இராமசாமி, சி. வி. எம். அண்ணாமலை, என். ஏ. ரஷீத் மற்றும் பலரும் சொற்பொழிவாற்றுவர்.

சிறப்புச்சொற்பொழிவு

18—9—55 அன்று, பெங்களூர் நகர், அக்கிப்பேட்டை தி. மு. கழக நூல் நிலைய வளர்ச்சி நிதிக்கென, சர். புட்டண்ணச் செட்டி மண்டபத்தில், தோழர் எஸ். வி. பதி தலைமையில் சிறப்புச் சொற்பொழிவுக் கூட்டம் நடைபெறும். தோழர்கள் ஈ. வெ. கி. சம்பத், டி. கே. சீனிவாசன், ஏ. டி. பிரான்சிஸ் ஆகியோர் பேசுவர். தோழர் டாகூர் அனிபா இன்னிசை வழங்குவார்.

சென்னை—37-வது வட்ட தி. மு. கழகச் செயற்குழு உறுப்பினர்கட்கு

14—9—55 இரவு 8 மணிக்கு, சென்னை—இராயப்பேட்டை (37-வது வட்டம்) கழகப் பணிமனையில் கிளைக் கழகச் செயற்குழுக் கூட்டம் நடைபெறும். கழக வரவு-செலவு கணக்கு சரி பார்த்தல், திராவிட நாடு பிரிவினை வாரம் கொண்டாடுதல், மற்றும் சில பிரச்சினைகள் குறித்து ஆலோசிக்கப்படும்.

சென்னை—43-வது வட்ட தி. மு. கழகச் செயற்குழு உறுப்பினர்கட்கு

14—9—55 இரவு 8 மணிக்கு கழகப் பணி மனையில் அவசரச் செயற்குழுக்கூட்டம் நடைபெறும்.

இரயில்வே, கூட்டுறவு கைத்தறி நெசவாலைத் தொழிலாளர் நிதி தருவர்

17—9—55 அன்று இரயில்வே தொழிலாளர்கள் நடத்தும் தி. மு. கழக மாநில மாநாட்டிற்கான நிதி அளிப்புப் பொதுக்கூட்டத்தில், எண் 55, பேசின்பிரிட்ஜ் சாலையில் இயங்கிவரும் சென்னை மாநில கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கத்தைச் சேர்ந்த உறுப்பினர்கள், தங்கள் சங்கச் சார்பில் தோழர் த. மாசிலாமணி மூலம் ரூ. 29—15—9-ஐயும், அண்ணா அவர்களிடம் தருவார்.

'பாரதியார் நினைவு நாள்'

14—9—55 மாலை6-30 மணிக்கு சென்னை குளோ, எண். 10 நகர இளைஞர் கழக மனையில் திரு ஏ. பி. பாலசுப்பிரமணியம் தலைமையில் நடைபெறும். தோழர் த. மு. அண்ணாமலை சொற்பொழிவாற்றுவார்.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம். ஏ., அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று, (24, சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன், எம் ஏ.